செ.வெ.எண்: 68 நாள்:29.11.2017

திருநெல்வேலி வண்ணார்பேட்டை மீனாட்சி ஹோண்டா இருசக்கர வாகன விற்பனை நிலையத்தில் சாலை பாதுகாப்பு மையத்தினை (Road Safety Corner) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.

---

திருநெல்வேலி வண்ணார்பேட்டை மீனாட்சி ஹோண்டா இருசக்கர வாகன விற்பனை நிலையத்தில் சாலை பாதுகாப்பு மையம் (Road Safety Corner) திறப்பு நிகழ்ச்சி இன்று (29.11.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு சாலை பாதுகாப்பு மையத்தினை திறந்து வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழக அரசு இருசக்கர வாகன ஓட்டிகளால் ஏற்படும் விபத்தினை தவிர்க்கும் பொருட்டு இருசக்கர வாகன விற்பனை மையங்களில் சாலை பாதுகாப்பு மையங்களை அமைத்து புதிதாக இருசக்கர வாகனங்கள் வாங்கும் பொதுமக்களுக்கு சாலை பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வண்ணார்பேட்டை மீனாட்சி ஹோண்டா இருசக்கர வாகன விற்பனை நிலையத்தில் சாலை பாதுகாப்பு மையம் (Road Safety Corner) திறந்து வைக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து இருசக்கர வாகன விற்பனை நிலையங்களிலும் சாலை பாதுகாப்பு மையம் (Road Safety Corner) திறக்கப்படவுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இருசக்கர வாகனம் மூலமாக 1785 சாலை விபத்துகள் நடைபெற்றுள்ளது. இதில் 283 நபர்கள் உயிரிழந்துள்ளனர். செயலாக்கம் மற்றும் காவல் துறையின் மூலமாக தனிக்கை மேற்கொண்டதில் குடிபோதையில் வாகனம் இயக்கியது, சொல்போன் பேசிக் கொண்டு வாகன ஓட்டியது, போக்குவரத்து விதிகளை மீறியது போன்ற குற்றங்களுக்காக திருநெல்வேலி மாவட்டத்தில் 7567 ஓட்டுநர் உரிமங்கள் கைப்பற்றப்பட்டு 6932 ஓட்டுநர் உரிமங்கள் மீது தற்காலிக தடைசெய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சாலை விபத்தினை தடுக்கும் வகையில் அரசு எடுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி துணைப் போக்குவரத்து ஆணையர் திரு.எம்.மணக்குமார், திருநெல்வேலி மற்றும் தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திருமதி.ஜீ.சசி, சங்கரன்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.சரவணபவன், மீனாட்சி ஹோண்டா மேலாண்மை இயக்குநர் திரு.டால்டன் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள், ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.**